ந.க. எண் 145 / 2010/ அ　　　　　　　　　　　　　　　　　　　　பேரூராட்சி அலுவலகம்
நாள் 07.12. 2010　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　கொரடாச்சேரி

# ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி பேரூராட்சிக்கு 2010 - 2011ம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையினை ஈடுசெய்யும் மான்யம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள கீழ்கண்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நிகழும் 2010 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் நாள் புதன்கிழமை மாலை 3.00 மணி வரையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினம் (22.12.2010) மாலை 4.00 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 21.12.2010ம் நாள் செவ்வாய் கிழமை மாலை 3.00 மணி வரை கொரடாச்சேரி பேரூராட்சி அலுவலகத்தில் அதற்கான கிரயத் தொகையை செலுத்தி அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

## இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையினை ஈடுசெய்யும் மான்யம் திட்டம் – 2010–2011

| வ. எண் | வேலையின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீடு ரூபாய் (லட்சத்தில்) | ஒப்பந்த புள்ளி படிவத்தின் கட்டண தொகை | முன் வைப்புத் தொகை | வேலை முடிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|---|
| **1** | வடக்குமாங்குடியில் தார்சாலை அமைத்தல் | **25.00** | **6000/- +Vat 240** | **25000** | **120 நாட்கள்** |

## நிபந்தனைகள்

1. கொரடாச்சேரி பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் உரிய விதிமுறைகள் படி தங்களது பதிவினை 2010 – 2011ம் ஆண்டிற்கு புதுப்பித்துக் கொண்டவர்களுக்கு மட்டுமே ஷெட்யூல் வழங்கப்படும்.

2. டெண்டர் ஷெட்யூல்கள் அனைத்தும் மூடி முத்திரையிடப்பட்ட உறையினுள் வைக்கப்பட்டு உறையின் மேல் வேலையின் பெயர், அனுப்புநர் மற்றும் பெறுநர் முகவரி ஆகியவற்றை தெளிவாக எழுதியிருத்தல் வேண்டும், டெண்டருடன் அவ்வேலைக்கான முன் வைப்பு தொகையை கொரடாச்சேரி பேரூராட்சியில் செலுத்தியதற்கான ரசீதையும் இணைக்கப்பட வேண்டும். டேவணித் தொகை செலுத்தாத டெண்டர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

3. வேலையின் மதிப்பீட்டில் 1 சதவீதம் டெண்டர் டேவணியாக தற்சமயம் செலுத்தப்படல் வேண்டும். வேலை உத்தரவு வழங்கப்பட்டதும் வேலையின் மதிப்பீட்டில் 1 சதவீதம் டெண்டர் டேவணியாக பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

4. வரப்பெறும் டெண்டர்கள் பிரித்து பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளும் போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு செயல் அலுவலரின் தீர்ப்பே முடிவானது. டெண்டரை ஒத்திவைக்கவும், ரத்து செய்யவும், நிராகரிக்கவும் செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

5. ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் கொரடாச்சேரி பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும். டெண்டரை ஏற்கவும் நிராகரிக்கவும் மன்றத்திற்கு உரிமையுண்டு.

6. ஒப்பந்தக்காரர்கள் உரிய காலத்தில் வேலையை செய்து முடிக்கத் தவறினால் வேலை உத்திரவு ரத்து செய்யப்பட்டு மாற்று ஏற்பாட்டின் மூலம் வேலைகளை செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவ்வாறு நிறைவேற்றப்படுவதால் கொரடாச்சேரி பேரூராட்சிக்கு ஏற்படும் இழப்பிற்கு ஒப்பந்தக்காரரே முழுப்பொறுப்பாகும். மேலும் ஒப்பந்தப்பதிவும் ரத்து செய்யப்படும்.

7. வேலைகள் ஆரம்பிக்கும் முன், வேலைகள் நடைபெறும் பொழுது மற்றும் வேலை முடிவடைந்த நிலை ஆகிய மூன்று நிலைகளில் கண்டிப்பாக புகைப்படங்கள் எடுத்து வேலைப்பட்டியலுடன் இணைக்கப்பட வேண்டும். புகைப்படங்கள் இணைக்காவிட்டால் தொகை வழங்கப்படமாட்டாது.

8. வேலைகளுக்கான தார், சிமெண்ட், கம்பி போன்றவற்றை ஒப்பந்தக்காரர்களே வாங்கி உபயோகித்துக் கொள்ள வேண்டும். அவைகள் தரமானதாக ஐ.எஸ்.ஐ. முத்திரை கொண்டதாக இருத்தல் வேண்டும். மேலும், கட்டுமான பொருட்கள் பொறியாளரிடம் ஒப்புதல் பெற வேண்டும். மேற்படி பொருள்களுக்கான பட்டியல்களை பொறியாளர்களின் மேலொப்பத்துடன் பட்டியலில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. ஒப்பந்தக்காரர் செய்யும் வேலை மதிப்பு தொகையில் வருமான வரி, மதிப்புக் கூட்டு வரி , கட்டிட தொழிலாளர் நலநிதி மற்றும் பாதுகாப்பு கூடுதல் டேவணி ஆகியவைகளை என்ன விகிதத்தில் பிடித்தம் செய்ய வேண்டும் என்று அரசு ஆணை உள்ளதோ அதன்படி பிடித்தம் செய்து கொண்டு மீத தொகைக்கு காசோலை வழங்கப்படும்.

10. டெண்டர் படிவங்களில் அடித்தல், திருத்துதல் , ஏதும் இருக்கக் கூடாது .அவ்வாறு இருக்கும் பச்சத்தில் அதற்கு ஒப்பந்தக்காரரால் கையெப்பம்மிடப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டு இருக்க வேண்டும்.

11. ஒப்புக் கொள்ளப்படாத மற்றும் வேலைக் கிடைக்கப் பெறாத ஒப்பந்தக்காரர்களுடைய டெண்டர் டேவணி தொகை, மன்றத்தின் பரிசீலனைக்கும் பிறகு காசோலையாக வழங்கப்படும்.

12. ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தக்காரர் வேலை உத்தரவு (Work Order) கிடைத்தவுடன் ரூபாய் 50/—க்கு குறையாத முத்திரைத் தாளில் முச்சலிக்காவும் ஒப்பந்தப் படிவத்தில் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

13. வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர் சேகரம் செய்யும் பொருட்கள் மதிப்பீடு மற்றும் ஒப்பந்தப் படிவம் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள அளவுக் கணக்கு எண்ணிக்கை அளவின் படி (சைஸ்) —யும் இருக்க வேண்டும். அவ்வாறு செய்யாத சேகரங்களை நிராகரிக்க பேரூராட்சிக்கு உரிமை உண்டு.

14. ஒப்பந்தக்காரர் செலுத்தியிருக்கும் டேவணித் தொகையானது ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றப்பட்டு அந்நிதியாண்டுக்கான தணிக்கை அறிக்கை கிடைக்கப் பெற்று பிடித்தம் ஏதுமிருப்பின் பிடித்தம் செய்துக் கொண்டு மீதித் தொகை காசோலையாக வழங்கப்படும்.

15. ஒப்பந்தக்காரர் தணிக்கையின் முடிவிற்கு கட்டுப்பட்டவராவார்.

16. அ) டெண்டர் வேலைக்கான ஷெட்டியூல் படிவம் பேரூராட்சி அலுவலகத்தில் அட்டவணையில் கண்ட கிரய தொகையை செலுத்தி 21.12.2010 மாலை 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ) வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம் கீழ்க்கண்டுள்ள இணையதளத்தில் பெற்று கொள்ளலாம். www.tenders.tn.gov.in / www.townpanchayats.tenders.tn.gov.in

17. ஒப்பந்தபணியினை உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர் அல்லது செயல் அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து அவர்கள் முன்னிலையிலேயே செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய தவறினால் ஒப்பந்தபணி நிறுத்தப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

18. ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்படிவம் பெற தகுதி மற்றும் பொருளாதார தகுதி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, பொறியாளர் , கையேட்டில் குறிப்பிட்டுள்ள தரப்படி ஒப்பந்தக்காரர்கள் இதில் கலந்துக் கொள்ளலாம்.

19. கொரடாச்சேரி பேரூராட்சியில் குறிப்பிட்ட காலத்தில் திட்டப்பணிகள் முடிக்கப்படாமல் நிலுவை வைத்துள்ள ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தப்புள்ளி படிவம் கண்டிப்பாக வழங்கப்படமாட்டாது.

20. ஒப்பந்தக்காரர்கள் எடுக்கப்பட்ட வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவுக்குள் வேலை முடிக்கப்பட வேண்டும்.தவறினால் ஒப்பந்த விதிமுறைகளின்படி அபாரதம் விதித்து வசூலிக்க நேரிடும். மேலும், பொறியியல் விதிமுறைகளின்படி மேல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

21. ஒவ்வொரு பணிக்கும் பணி குறித்த தகவல் பலகை பணி நடைபெறும் இடத்தில் வைக்கப்படவேண்டும்

22. மேலும் விதிமுறைகள் கொரடாச்சேரி பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

(ஒம்) திருஆர்.பாலச்சந்திரன் B.A.,
தலைவர்
பேரூராட்சி மன்றம், கொரடாச்சேரி

(ஒம்) திரு.செ.முனியசாமி,
செயல் அலுவலர்
பேரூராட்சி, கொரடாச்சேரி.

<u>பெறுதல்</u>
கொரடாச்சேரி பேரூராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள்.

<u>நகல்</u>

1. மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவாரூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குனர், தஞ்சாவூர் மண்டலம், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் அலுவலகம் பனகல் கட்டிடம் , தஞ்சாவூர்.
4. உதவிப் பொறியாளர், பேரூராட்சி அலுவலகம், குடவாசல் (தொகுப்பு)
5. பணி மேற்பார்வையாளர், பேரூராட்சி அலுவலகம், நன்னிலம் (தொகுப்பு)
6. பேரூராட்சி மன்ற தலைவர், துணைத்தலைவர், மற்றும் உறுப்பினர்கள் தகவலுக்காக.
7. உள்ளூர் மற்றும் வெளியூர் அலுவலகங்களுக்கு விளம்பரத்திற்காக அனுப்பப்படுகிறது.
8. அலுவலக விளம்பர பலகைக்கு